*Chapter XXII Code of Criminal Procedure.)*
*IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ATTUR.*

*Case No.:* ***CC. 334/2020***

*Deposition of Witness for Prosecuting/Defence/Court* ***PSE-1***

*Name / Father's Name:* ***திரு.கிருஷ்ணராஜ் த/பெ. சின்னப்பன்***

*Village/ Taluk:*

*Calling, Age:*

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **13.11.2025.**

துவக்க நேரம் 01.01 A.N

**முதல் விசாரணை**

1) நான், வனக்காப்பாளராக பணிபுரிந்து தற்பொழுது ஓய்வு பெற்று வீட்டில் இருக்கிறேன். நான், கடந்த 2018ம் வருடம் கருமந்துறை வனச்சரகத்தில் உள்ள அடியனூர் பீட்டில், வனக்காப்பாளராக பணிபுரிந்து வந்தேன். கடந்த 06.08.2018 அன்று மாலை சுமார் 05.30 மணியளவில் அடியனூர் பீட்டில், பிளாக் 3ல், வனவர் திரு.தேசிங்கு, வனக்காப்பாளர்களாகிய நானும், சுப்ரமணியும், வனக்காவலர் திரு.ஆண்டி ஆகிய நான்குபேரும் ரோந்திற்கு சென்றோம்.

2) அப்பொழுது அந்த இடத்தில் காட்டில் தீ பற்றி எறிந்துகொண்டிருந்தது. அருகில் சென்று பார்த்தபொழுது, தீர்த்தன் த.பெ சின்னதம்பி என்பவர் வனப்பகுதியை திருத்தி, வனத்துறை நிலத்தை ஆக்கிரமிப்பு செய்து, நிலத்தை ஆக்கிரமிக்கும் தோரணையில் நிலத்தில், செடி, கொடிகள், முட்புதர்களை வெட்டி, தீயிட்டு கொளுத்திக்கொண்டிருந்தார்.

3) அப்பொழுது நாங்கள் நான்குபேரும் சென்று, அவரை சுற்றி வளைத்து பிடித்து வனத்துறை பகுதியை தீ வைத்தது தவறு என்று சொல்லி அவரிடம் சுட்டிக்காட்டினோம். அதற்கு அவர், தவறை ஒப்புக்கொண்டு என்னை

இந்த ஒருமுறை மன்னித்துவிடுங்கள், இனி தீ வைக்க மாட்டேன் என்று கேட்டுக்கொண்டார். ஆனால் அரசு நிலத்தை தீ வைத்து தீக்கரையாக்கியது குற்றம் என்பதால், அவர் தனது பெயர் மற்றும் விலாசத்தை கூறி ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார், அதனை நான், வனவர் தேசிங்கு முன்னிலையில் எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்தேன்.

4) பின்பு அவரிடமிருந்து கொடுவாள் மற்றும் தீப்பெட்டி பிடிபொருளாக கைப்பற்றி, மகஜர் ஸ்டேட்மென்ட் தயார் செய்தேன். அந்த இடத்திற்கான GPS வரைபடம் எடுத்து படம் வரைந்து, ஆவணங்கள் தயார் செய்தேன். மேற்படி தீக்கரையான இடம் 1–3/4 ஏக்கர் நிலம் ஆகும். அந்த இடத்தை பார்த்து படம் வரைந்தேன்.

5) அதற்கு பின்பு குற்ற அறிக்கை தயார் செய்து, என்னுடன் வந்த வனக்காவலர் சீனிவாசன் என்பவரிடம் சாட்சி கையெழுத்து பெற்றேன். பின்பு H நமூனா தயார் செய்தேன். பின்பு எதிரி மற்றும் வழக்கு சொத்துடன் அலுவலகம் வந்து, எதிரியின் மீது வழக்கு பதிவு செய்ய உதவியாக இருந்தேன். **எதிரியின் ஒப்புதல் வாக்குமூலம் அ.த.சா.ஆ.1, மகஜர் ஸ்டேட்மென்ட் அ.த.சா.ஆ.2, H நமூனா அ.த.சா.ஆ.3, குற்ற அறிக்கை அ.த.சா.ஆ.4, GPS படம் அ.த.சா.ஆ.5, பிரிண்ட் செய்யப்பட்ட வரைபடம் அ.த.சா.ஆ.6, எறிந்த காப்புக்காட்டின் புகைப்படம் அ.த.சா.ஆ.7, பீட் மேப் அ.த.சா.ஆ.8 ஆகும்.**

**எதிரி ஆஜரில்லை. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1) இந்த வழக்கின் புகார்தாரர், எங்களுடைய வனச்சரகர் ஞானராஜ் என்பவர்தான் என்று சொன்னால் சரிதான். இவ்வழக்கின் இறுதியறிக்கையை ஞானராஜ் என்பவர் தாக்கல் செய்துள்ளாரா என்றால் ஆமாம். இந்த வழக்கின் எதிரியை கைது செய்த பின்புதான் ஒப்புதல் வாக்குமூலம் பெறப்பட்டதா என்றால் ஆமாம். சம்பவம் நடந்ததாக சொல்லும் இடத்திற்கு அருகில் இருந்த

பொதுமக்களை இவ்வழக்கில் தனிநபர் சாட்சிகளாக போடவில்லை என்று சொன்னால் சரிதான்.

2) இவ்வழக்கில் கைப்பற்றப்பட்டதாக சொல்லும் ஆயுதங்களை, நீதிமன்றத்தில் ஒப்படைக்கவில்லை என்று சொன்னால் சரிதான், அலுவலகத்தில் வைத்துள்ளோம். இவ்வழக்கு சொத்தை அரசிற்கு பரிந்துரை செய்ய நடவடிக்கை எதுவும் எடுத்தோமா என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது.

3) சம்பவம் நடந்ததாக சொல்லும் இடம் காப்புக்காடுதான் என்பதற்கு, ஏதேனும் ஆவணத்தை நீதிமன்றத்தில் சமர்ப்பித்தோமா என்றால் இல்லை. நாங்கள் தாக்கல் செய்துள்ள Google Map–ல், காப்புக்காடு எந்த சர்வே எண், இவ்வழக்கின் காப்புக்காடு எந்த பகுதி என்பது வராது என்று சொன்னால் சரிதான்.

4) அ.த.சா.ஆ.7 ஆவணத்தில் உள்ள புகைப்படத்தை பார்த்து சம்பவம் நடந்த இடம் இதுதான் என்று குறிப்பிட்டு சொல்லமுடியாது என்று சொன்னால் சரிதான், GPS reading–ல் உள்ள எண்களை பரிசீலித்தால் அது காப்புக்காடு என்பதை காட்டிவிடும்.

5) எதிரி, சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்தில் உள்ள செடி, முட்களை வெட்டியபொழுது பார்த்ததாக தனிநபர் சாட்சிகளை போடவில்லை என்று சொன்னால் சரிதான், நாங்கள் ரோந்து சென்றபொழுது எதிரியை அந்த இடத்தில் பார்த்தோம்.

6) கைப்பற்றுதல் மகஜரில், பொருட்களை கைப்பற்றியது பற்றி எதிரியிடம் குறிப்பிட்டு கைப்பற்றுதல் மகஜரில் எதிரியின் கையெழுத்து வாங்கவில்லை என்று சொன்னால் சரிதான். எதிரியிடம் பெறப்பட்டதாக சொல்லும் ஒப்புதல் வாக்குமூலத்திலும் பிடிபொருட்கள் கைப்பற்றப்பட்டதாக குறிப்பிடப்படவில்லை என்று சொன்னால் சரிதான்.

7) நான் சொன்ன தேதியில், சொன்ன நேரத்தில் ரோந்து பணியில் இருந்தபொழுது, இவ்வழக்கு சம்பவம் நடைபெற்றதாக சொல்வதும், அப்பொழுது எதிரியை கைது செய்து, ஆயுதங்களை கைப்பற்றி, வழக்கு ஆவணங்கள் தயார் செய்ததாக சொல்வது தவறு என்றும் சொன்னால் சரியல்ல. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் தேதி, நேரத்தில் நான் சம்பவயிடத்திற்கு போகவில்லை என்றும், புள்ளிவிவர கணக்கிற்காக வேண்டுமென்றே எதிரிக்கெதிராக இவ்வழக்கு ஆவணங்களை தயார் செய்து, அதற்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

முடிவு நேரம் 01.31 A.N

C UDAYASUNDARAM

Digitally signed by C UDAYASUNDARAM
Date: 2025.11.13 19:34:10 +0530

Judicial Magistrate No.2, Attur.